# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-3816/A/2019**

திரு பா.சந்திரசேகரன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்*

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
தஞ்சாவூர்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 21.01.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், தனது பெயர் மற்றும் தனது கைப்பேசி எண்ணுடன் தஞ்சாவூர் அரண்மனை வெடிகுண்டு மிரட்டல் கடிதம் பாஸ்கரன் எழுதியது தொடர்பாக 5 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 12.03.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன் கீழ் 18.03.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 05.04.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 25.04.2019-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 16.10.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 24.10.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான,

குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 04.11.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க மனுதாரர் தமது கோரிக்கைகளுக்கு அனைத்துத் தகவல்களையும் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிவிட்டதாகவும், பெறப்பட்ட தகவல்களால் தான் மனநிறைவு அடைவதாகவும் தெரிவித்துள்ளார். **ஆகவே வழக்கை முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.**

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA-3816/A/2019**

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர், தலைமையிடம்,
மாவட்ட காவல் அலுவலகம்,
தஞ்சாவூர்.

மனுதாரர்

திரு பா.சந்திரசேகரன்,
1/39, அண்ணாநகர் முதல் தெரு,
பசுபதிகோவில் அஞ்சல்-614 206,
தஞ்சாவூர் மாவட்டம்.

PR/PS 18.11.2020